அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. - 10/2001

செயலாளர், பாதுகாப்பு அமைச்சு,
கல்வி அமைச்சு
உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சு,
தகவல் தொடர்புதுறை அமைச்சு,
சமுர்த்தி கிராம அபிவிருத்தி அமைச்சு,
சுதேச வைத்திய அமைச்சு,
தொழில் அமைச்சு,
சுற்றாடல் அமைச்சு,
மகளிர் விவகார அமைச்சு.

அனைத்து மாகாணசபைகளின் செயலாளர்கள்.

தேசிய சுகாதார வாரம் - 2001 ஆண்டு

மேற்படி விடயம் தொடர்பாக 2001.02.28 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின்படி மே 21-27 வரையிலான ஏழு நாட்களைக்கொண்ட காலம் 2001 ஆம் ஆண்டிற்கான தேசிய சுகாதார வாரமாக சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

உயிர்களை கட்டிக்காப்பதற்கு தொற்று நோய்களை ஒழித்தல் என்ற பிரதான தொனிப்பொருளின்கீழ் தொற்றும் தொற்றாத நோய்களை தடுத்தல் மற்றும் சுகாதாரத்திற்கு சாதகமான முறையில் சுற்றாடலை பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 18 முறையான சுகாதார பாதுகாப்பு வழிமுறையினால் எதிர்பார்க்கப்பட்டவாறு நல்லதொரு வாழ்க்கை முறைகளை மேம்படுத்துவதற்கு காரணமாகும் அடிப்படை வழிமுறைகள் தேசிய சுகாதார வாரத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இச் சுகாதார வாரத்தினுள் செயற்படும் அத் தொழில்பாடுகளுக்கு ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டங்களில் ஏனைய அமைச்சுக்கள் பின்வருமாறு பங்குகொள்ள வேண்டுமென்பதுடன், மாகாண அமைச்சுக்கள் மற்றும் நேர்வரிசை அமைச்சுக்களின் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அதன்படி நடவடிக்கை எடுப்பதற்காக வேண்டிய ஆலோசனைகள் வழங்குவது அத்தியாவசியமாகுமென கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையில் 2001.05.10ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

1. <u>கௌரவ மாகாண தலைமை அமைச்சரிடமிருந்து எதிர்பார்க்கும் உதவி.</u>

1.1 தேசியசுகாதார வாரத்திற்காக தமது மாவட்டங்களினுள் செயற்படுத்த வேண்டிய சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை இனம் காணுதல்.

மாகாண சுகாதார அமைச்சர், மாகாண சுகாதார செயலாளர்/ மாகாண சுகாதார பணிப்பாளருடன் கலந்தாலோசித்து இதனை திட்டமிடுவது உசிதமாகும்.

1.2 டெங்கு மற்றும் ஏனைய தொற்றுநோய் தடுப்புபணிகளை வலுப்படுத்துவதற்கு தேவைப்படும் மாகாண குழுக்கள் மாவட்டக் குழுக்கள், மற்றும் பிரதேச குழுக்களை தாபிப்பதற்கு உரிய ஆலோசனை வழங்கலும், அக்குழுக்களின் இயக்கத்தை கண்காணித்தலும்.

1.3 தொடர்புடைய மாகாண அமைச்சுக்களுடன் கூட்டிணைத்தலும் வேண்டிய ஆலோசனை வழங்கலும்.

1.4 சுகாதார அமைச்சினால் வழங்கப்படும் ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக அவசிய அலுவல்களுக்காக தேவைப்படும் ஏனைய ஒதுக்கீடுகள் மற்றும் வளங்களை மாகாணங்களின் வாயிலாகவே ஏற்படுத்திக்கொள்ளல்.

1.5 தேசிய சுகாதார வாரம் தொடர்பில் கல்வி அமைச்சினால் செயற்படுத்தப்படும் பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கிய கவனம் செலுத்துதலும் வேண்டிய ஆலோசனை வழங்கலும்.

1.6 தமது பிரதேசத்தின் ஊடாக பிரயாணம் செய்யும் சுகயாத்திரை காட்சி வண்டிகள் ஊர்வலங்கள் ஆகியன ஏற்புடைய விசித்திரங்கள் உள்ளடங்கிய நிகழ்ச்சித்திட்டங்களை கொண்டிருக்கும் வகையில் விசேட கவனத்தை செலுத்தி வேண்டிய ஆலோசனைகளை வழங்குதல்.

1.7 சுகயாத்திரை நிகழ்ச்சித்திட்டத்திற்காக வேண்டிய பாதுகாப்பளிப்பதிற்காக சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளின் ஒத்துழைப்பைப் பெறல்.

2. உள்ளூராட்சி அமைச்சு மற்றும் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கின்ற உதவி.

2.1 தொற்று நோய்களை தடுப்பதற்காக சுகாதார பிரிவுகளின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக்குவதற்காக உதவியளித்தல்.

2.2 குப்பை கூழங்களை அகற்றுவது தொடர்பில் பொது மக்களை அறிவுறுத்தலும் அதற்காக வேண்டிய சேவையளித்தலும்

2.3 சுற்றாடலை சுத்தம் செய்தல் தொடர்பான சிரமதானங்களை நடாத்தும் சந்தர்ப்பங்களில் ஒத்துழைப்பு நல்குதலும் சேவைகளை வழங்குதலும்.

2.4 உணவு கட்டுக்காப்பை பரிசோதித்தல் தொடர்பில் செய்யப்படும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் போதும் சுற்றிவளைப்புகளின் போதும் வேண்டிய ஒத்துழைப்பு வழங்குதல்.

2.5 நுளம்புத் தடுப்புக்காக நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் போது வேண்டிய ஒத்துழைப்பும் சேவைகளும் அளித்து நுளம்பு தடுப்பு பணிகளை வலுப்படுத்த உதவியளித்தல்.

3. கல்வி அமைச்சிலிருந்து எதிர்பார்க்கும் உதவி

3.1 சுகாதார வாரத்தை வெற்றிகரமாக்கிக்கொள்வதற்காக பாடசாலை முறைமைகளை தீவிரமாக கலந்துகொள்ளச் செய்தல்.

3.2 பாடசாலைகளின் வாயிலாக சுகாதாரத்தை தொனிப்பொருளாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதலும், அதற்காக மாணவர்களினிடையில் இருந்து தலைமை பீடத்தை உருவாக்குதலும். (இதற்காக சுற்றறிக்கைகள் தற்போது கல்வி அமைச்சின் செயலாளரால் அனுப்பப்பட்டுள்ளன) போதனைகள் கருத்தரங்குகள், அறிவுப்போட்டிகள், ஓவிய கட்டுரை போட்டிகள் என்பவற்றை இந்நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடக்கலாம்.